# ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப் பொருள்

## 30.08.2019-ம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.

**பொருள் எண்.01)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீலை–2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

ந.க.எண்.0665/2018/சி1

**பொருள் எண்.02)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்–2019, ஏப்ரல–2019, மே–2019, ஜீன்–2019 மற்றும் ஜீலை–2019 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

**பொருள் எண்.03)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 கொல்லபாளையம் பகுதி, மாரியம்மன் கோயில் அருகில் உள்ள பொதுமக்களின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்திடவும் மேற்கண்ட பகுதியில் ஆழ்துளை கிணறுகள் கூடிய மினிபவர் பம்ப் அமைத்திடும் பணி மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டு செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.04)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 சந்தாபேட்டை பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தண்ணீர் தேவையினை பூர்த்தி செய்திடவும் மேற்கண்ட பகுதியில் மினிபவர் பம்புடன் கூடிய சிண்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டு செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.05)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30 ஏரிக்கரை தெரு பகுதியில் உள்ள பொதுமக்களின் தண்ணீர் தேவையினை பூர்த்தி செய்திட மேற்கண்ட பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினிபவர் பம்புடன் அமைத்திடவும் பணி மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டு செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் வடிகால் நிதேயில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.06)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18ல் அண்ணாநகர் (Yamaha Showroom) அருகில் உள்ள பகுதியில் ஏரிக்கரை தெரு பகுதியில் உள்ள பொதுமக்களின் தண்ணீர் தேவையினை பூர்த்தி செய்திட மேற்கண்ட பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினிபவர் பம்புடன் அமைத்திடவும் பணி மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டு செலவினம் ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் வடிகால் நிதேயில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.07)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் தினசரி பயன்படுத்தப்படும் தளவாடப்பொருட்கள் 2019–20ஆம் ஆண்டிற்கு வாங்கிக்கொள்ளவும் இதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்க தனி அலுவலர் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.08)** ஆற்காடு நகராட்சி தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி கீழ்கண்ட தொழில் வல்லுனர்கள் இந்நகராட்சியில் பதிவு செய்து உள்ளனர். அவர்களுக்கு (2019–2024) 31.03.2024 வரை 5 ஆண்டுகள் வரை உரிமம் வழங்கப்பட்டுள்ளது விவரம்

| வ.எண் | திருவாளர்கள் | தரம் வரிசை |
|---|---|---|
| 1 | எ.ஆர். செல்வரசன் | RE-I |
| 2 | என்.பாபு | RE -I |
| 3 | கே.எ.அருள்நம்பிஅரசு | RE -I |
| 4 | பி.கோகுலகிருஷ்ணன் | RE -II |
| 5 | எஸ்.பாலநாகராஜன் | RE –III |
| 6 | வி.ரேணுமூர்த்தி | RE -III |
| 7 | சி.சுரேஷ்பாபு | RE –III |
| 8 | பி.ஆர்.சரவணன் | RE –III |
| 9 | பி.ஜெய்சங்கர் | RE –III |
| 10 | எ.அனிதா | RE –III |
| 11 | வி.விஜயன் | RE –III |
| 12 | எஸ்.வெங்கடேசன் | RE –III |
| 13 | எஸ்.தினேஷ் | RE –III |

மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு 1) மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண்.09)** ஆற்காடு நகராட்சி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் (1 முதல் 30 வரையில்) மழைநீர் சேகரிப்பு உட்டமைப்பு அமைக்கவும் பாழடைந்த கட்டமைப்புகளை சரிசெய்யவும் கட்டமைப்பு இல்லாத கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தவும் மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தி விளம்பரபடுத்தவும் மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளதா, இல்லையா என கணக்கீடு செய்யவும் அதற்கான படிவங்கள், அறிவிப்பு ஸ்டிக்கர் ஆகியவற்றினை அச்சிடவும், தோரய செலவினம் ரூ.1,00,000/—க்கு ஆகும் செலவினை பொதுநிதியிலிருந்து வழங்கிடவும் அவற்றினை கூட்டுறவு நிறுவனம் மூலம் வாங்கிக்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.10)** தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் ந.க.எண்.4311/2018/தே.பொ நாள்.28.022019ன் படி உள்ளாட்சி தேர்தல் 2019—கான வார்டு மறுவரையாறை செய்யப்பட்ட புதிய வார்டுக்கான வாக்குசாவடி மையங்களின் பட்டியலினை மாவட்ட ஆட்சியர், வேலூர் அவர்களின் ஒப்புதல் பெறுவதற்கு வாக்குசாவடிகளின் தரைப்படம் மற்றும் நகர வரைபடத்தில் புதிய வார்டுக்கான வாக்குச்சாவடி மையங்களின் விவரங்கள் ஆகியவற்றினை Auto Cadd –ல் தயாரித்திட ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/—ஐ பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.96/2019/எப்1

**பொருள் எண்.11)** இராணிப்பேட்டை கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற வழக்கு எண். O.S.No.4/2019ல் திரு.கே.திருமுருகன் என்பவர் நகராட்சி ஆணையருக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார் அவ்வழக்கில் நகராட்சி சார்பில் நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.ஜெய்சங்கர் அவர்கள் வாதிட வழக்கு கட்டணம் ரூ.5000/— வழங்கிட கடிதம் 14.03.2019 அன்று வழங்கியுள்ளார் இத்தொகையினை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
அ.கு. அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.811/2019/எப்1

**பொருள் எண்.12)** இந்நகராட்சியில் வார்டு எ, பிளாக் 16, டி.எஸ்.எண்.4/2, 4/3 கதவு எண்.34/1, வேலூர் மெயின்ரோடு ஆற்காடு என்ற விலாசத்தில் 50 எச்பி கொண்ட மரத்தூள் கட்டையாக்கும் இயந்திரம் நிறுவி தொழிற்செய்ய உரிமையாளர் தொழில் உரிமம் வழங்கவதற்கு மேற்படி பகுதி தொழிற்பகதி என தடையில்லா சான்று நகரமைப்பு பிரிவில் பெறப்பட்டுள்ளது. மேலும், பொதுசுகாதார விதிகளின் கீழ் திரு.சத்தியமூர்த்தி என்பவருக்கு மேற்படி தொழிற்செய்ய தொழிற் உரிமம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) மேற்படி இடம் தொழிற்பகுதி என தடையில்லா சான்றை நகரமைப்பு பிரிவில் பெறப்பட்டுள்ளதால் பொதுசுகாதார விதிகளின் கீழ் உரிமையாளருக்கு தொழிற் செய்ய உரிமம் வழங்க தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.1780/2018/எச்1

**பொருள் எண்.13)** இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான வட்டி 2008–2009 முதல் 2018–2019 முடிய 11 ஆண்டுகளுக்கு வட்டி பிரேரணை தயாரிக்கவும் மற்றும் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகையை பாரத மாநில வங்கி, ஆற்காடு கிளையின் மூலம் செலுத்தப்படும் தொகைக்கு சார் கருவூலம் ஆற்காடு அவர்களால் வழங்கப்படும் கைசாத்து பட்டியலுக்கு வட்டி பிரேரணை தயாரிக்க தோராய செலவினம் ரூ.1.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) ரூ.1.00 இலட்சம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.14)** இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான வட்டி 2008–2009 முதல் 2018–2019 முடிய 11 ஆண்டுகளுக்கு வட்டி பிரேரணை தயாரிக்கவும் மற்றும் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகையை பாரத மாநில வங்கி, ஆற்காடு கிளையின் மூலம் செலுத்தப்படும் தொகைக்கு சார் கருவூலம் ஆற்காடு அவர்களால் வழங்கப்படும் கைசாத்து பட்டியலுக்கு வட்டி பிரேரணை தயாரிக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் 16.09.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளி விவரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Jayaraman soft systems<br>170/K, Kamaraj street,<br>Anna Nagar, Ext. Cheyyar<br>Pin- 604407 | Rs.77850/- |
| 2 | Ezhilarasi Computers<br>Road street,<br>Pernamallur North & Post<br>Vandavasi Taluk – 604503 | Rs.80650/- |
| 3 | Tamilzhazhagan Soft systems<br>Ariyapadi Village<br>Pernamallur post<br>Vandavasi | Rs.83350/- |

அ.கு. 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) வ.எண்.1ல் கண்டுள்ள Jayaraman soft systems அவர்களால் வழங்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.15)** நகராட்சி பகுதிகளில் வைக்கப்படும் விளம்பர பலகைகள் அனுமதித்தல் சம்மந்தமாக "தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளில் விளம்பர பலகைகளுக்கு விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003" என்ற விதிகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும் விளம்பர பலகைள் நிர்வகித்தல் சம்மந்தமாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ல் புதிய சட்டப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இவையும் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது கீழ்கண்ட அரசாணைகள் மூலம் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தம் செய்து அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அ) மேற்கண்ட பொருள் சம்மந்தமான கீழ்காணும் அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. அரசாணை எண்.(4D) 2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:05.06.2018.
2. அரசாணை எண்.15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:30.01.2019.
3. அரசாணை எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்:31.01.2019.

ஆ) மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்திருத்த அரசாணைகளில் பிரதானமாக கீழ்கண்ட சட்ட விதிகளில் திருத்தங்கள் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் விண்ணப்ப கட்டணம் ரூ.1000/- நிர்ணயித்துள்ளது
2. விளம்பர வரி என்ற வாசகத்தினை விளம்பர பலகை உரிமக் கட்டணம் என மாற்றி அமைத்துள்ளது

   இதன்படிக்கு நகராட்சி பகுதிகளுக்கு பொறுத்த மட்டில் (3 ஆண்டிற்கு) உரிமக் கட்டணம்

   1) பிரதான மற்றும் பேருந்து தடச் சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.6000/-
   2) மற்ற சாலைகளில் - 1 ச.மீ க்கு ரூ.4000/-
3. வருடாந்திர வாடகை இந்நகராட்சி பொறுத்த மட்டில் பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.400/- இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/-
4. விளம்பர பலகைகள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் / இடங்களில் மட்டுமே அனுமதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
5. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு **285 ( I )** - ல் உள்ள தண்டணைக் கட்டணம் ரூ.10000/- உள்ளதை உயர்த்தி ரூ.25,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6. மேற்கூறிய அனைத்துக் கட்டணங்களும் நகராட்சியில் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவற்றின்படிக்கு இந்நகராட்சி பகுதிக்குள் இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம்/இடங்களில் விளம்பர பலகைகள் வைக்க அனுமதி கோரும் தேர்வுகளில் கீழ்கண்ட விகித அடிப்படையில் வருடாந்திர வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

1. பிரதான சாலையில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.400/-
2. இதர சாலைகளில் 1 சதுரமீட்டருக்கு 1 வருடத்திற்கு ரூ.300/-

**அலுவலக குறிப்பு :**

1. நகராட்சியின் வருமானத்தினை பெருக்கிடும் நோக்கத்துடன் மேற்குறிப்பிட்டள்ள சட்ட விதிகள் திருத்தம் பிறப்பிக்கப்பட்டுள்ளதை கருதி மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. ஏற்கனவே மேற்படி விதிகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படும் அடிப்படையிலும், விளம்பர பலகைள் அனுமதிக்ககும் தருணங்களில் நகராட்சி பொறியியல் பிரிவில் அன்றைய தேதியில் அனுமதி அளிக்கும் கட்டிடத்தின் நிலைப்புறுதி குறித்த கருத்தினை பெற்று நகராட்சி கட்டிடத்திற்கு அனுமதி பெறும் நபர்கள் எவ்வித சேதமும் விளைவிக்கக் கூடாது என்ற நிபந்தனைகளுடன் இந்நகராட்சி சொந்தமான கட்டிடங்களின் மீது விளம்பர பலகைகள் வைக்க அனுமதி வழங்குவதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.2527/2019/எப்1

**ஆற்காடு**
**நாள்: 30 .08.2019**

**தனி அலுவலர்,**
**ஆற்காடு நகராட்சி.**